முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 955

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.05.2022**, புதன்கிழமை

1. மகா சூட்சும குருராஜனே
மக்களை காத்தருளும் ஞானதேசிகனே
ஜெகத்தில் உன் சக்திகொண்டு
சித்திகள் உலகோர்க்கு வரமாகத் தந்து
2. தந்துமே தனித்துவம் பட மக்களை
தன்னார்வ தொண்டு கூட்டி ஞானியாக்கி
எந்தன் அவதாரமாக வந்த அரங்கனே
இனிதே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
3. யானும் ஞான அறிவுரை ஆசி தன்னை
இயம்பிடுவேன் சுபகிருது தகர்திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 28 ம் நாள், 11.05.2022 புதன்கிழமை)
ஞானதேசிகன் இந்த கலியுகத்தின் சிறந்த ஞானி
நம்பிக்கை ஊட்டி உலகோர்க்கு ஞானம் தருகின்ற
4. ஞானியர்கள் படை சூழ்ந்த மாதவசி
ஞானபண்டிதன் என் சூட்சும சொரூபி
நம்பிக்கை வைத்து உலகோர் அரங்கன் வழி வர
ஞானம் சித்தியாக சடுதி கிட்டி உலகோர்
5. உலகோர் வானவர்கள் போற்ற வாழும் காலமே வள்ளலாக
வையகத்தில் எல்லா வளமும் பெற்று
பெற்றுமே இனிதே பிசகின்றி பிரணவ சித்தியோடு
பெரும்பேறு கண்டும் திளைக்க நேரும்
6. பெருமைபட அரங்கனை நாடி வரும் பிரணவப்பிரியன் என்
பேரருளும் கிட்டி உலகோர் பிசகில்லா ஞான வாழ்வு அடைய நேரும்
நேர்மைபட நிலவுலகில் வாழும் மக்களுக்கு
ஞான தேசிகன் அருளும் தயவும் துணையாக நிற்கும்
7. வறுமை போக்கும் வல்லமை கூட்டும்
வாழும் காலமே ஞானியாக்கும்
ஆக்கம் தந்து அரங்கனுள் யானிருக்க
அனுகினால் அவர்கட்கெல்லாம் ஆறுமுகன் என் காட்சி உறுதி உறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—